2010 மே 12] [திரு. எ.வ. வேலு]

எண்ணிலே தொடர்பு கொண்டு சொன்னால், இதுபோன்ற பிரச்சினையை உடனேயே தீர்த்துக்கொள்வதற்கு, மாநில அளவிலே அந்தக் கட்டுப்பாட்டு அறையை ஏற்படுத்தியிருக்கிறோம். தொடர்ந்து இந்தப் பொருட்களை விற்பதன் மூலமாக அதிருப்தி ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. இருந்தாலும், கழகங்கள் மத்திய அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டில் இருப்பவை. மாநில அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், நுகர்வோர்களுடைய பிரச்சினையைத்தான் தீர்க்க முடியும். ஆகவே, மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருப்பவை இந்த எண்ணெய்க் கழகங்கள். அதனால் இதுபோன்ற சிறு, சிறு பிரச்சினை வருகின்றபோது மாண்புமிகு திரு. முரளி தியோரா அவர்களிடத்திலே கடிதத்தின்மூலமாகவும் சொல்கிறோம். நேரிடையாகவும் தொடர்பு கொண்டு சொல்கிறோம்.

முற்பகல் 11-35

சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியைப் பெற்று, சட்டமன்றம் முடிந்தவுடனேயே, இப்படி வற்புறுத்தக்கூடாது என்கிற அறிவுரைகளை நீங்கள் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முரளி தியோரா அவர்களிடத்திலும் துறையின் சார்பாகச் சொல்லவிருக்கிறோம் என்பதைத் தெரிவித்து, அப்படி எங்காவது வற்புறுத்தினால், உடனே துறைக்கு நீங்கள் கடிதம் அனுப்பினாலும் சரி அல்லது அந்த எண்ணிற்கு நீங்கள் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு தெரிவித்தால், அப்படி வற்புறுத்தக்கூடாது என்ற அறிவுரையை இந்த அரசு வழங்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

6. கவன ஈர்ப்பு

'கண்வலிக் கிழங்கு விதைகள்' விவசாயிகளுக்கு உரிய விலையில் கிடைக்கச் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. அர. சக்கரபாணி, திரு. எஸ்.கே. வேதரத்தினம் மற்றும் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் ஆகியோரில் ஒருவர் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

***திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல், நாகப்பட்டினம் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் விளையும் 'கண்வலிக் கிழங்கு' விதைகளைத் தனியார் நிறுவனங்கள் குறைந்த விலைக்கு வாங்குவதால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து" மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 55-ன்கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அர. சக்கரபாணி, திரு. எஸ்.கே. வேதரத்தினம், திரு. எஸ்.எஸ். சிவசங்கர் ஆகிய மூன்று பேர்களும் அரசின் கவனத்தை ஈர்த்திருக்கின்றார்கள். திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் பகுதி, நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம், அரியலூர் மாவட்டம் முழுவதும், தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் விளையும் கண்வலிக் கிழங்கு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை

சாகுபடி:

தமிழகத்தில் 2005-2006 ஆம் ஆண்டில் சுமார் 1,500 எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்ட கண்வலிக் கிழங்கு (குளோரியோசா சூப்பர்பா) தற்போது 2009-2010 ஆம் ஆண்டில் 3,600 எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு, 1,320 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. குறிப்பாக, திண்டுக்கல் மாவட்டத்தில் 480 எக்டரிலும், அரியலூர் மாவட்டத்தில் 510 எக்டரிலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 321 எக்டரிலும், இப்பயிர் கூடுதலான பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

2010 மே 12] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

சாகுபடி மற்றும் மானியம்:

கண்வலிக் கிழங்கிற்கு, கலப்பைக் கிழங்கு, காந்தள் மலர்ச் செடி மற்றும் நாபிக் கொடி என்ற பல பெயர்களும் உண்டு, இப்பயிரின் மலர் தமிழகத்தின் மாநில மலர் எனவும், ஜிம்பாப்வே நாட்டின் தேசிய மலர் எனவும் கட்டற்ற கலைக் களஞ்சியமான விக்கிபீடியாவில் இருந்து தெரிய வருகிறது. 180 நாட்கள் வயதுடைய இப்பயிரின் பருவ காலம் ஜூலை-ஆகஸ்ட் மாதமாகும். ஒரு ஏக்கர் சாகுபடி செய்ய 60 கிராம் எடையுள்ள விதைக் கிழங்குகள் 500 கிலோ தேவை. ஒரு கிலோ விதைக் கிழங்கின் விலை ரூ.250 ஆகும். ஒரு ஏக்கருக்கு ஆகும் சாகுபடி செலவு ரூ.2.50 இலட்சம். சராசரியாக ஒரு ஏக்கருக்கு 250 கிலோ விதைகள் மகசூலாகக் கிடைக்கும். மூலிகைப் பயிராகப் பயிரிடப்படும் கண்வலிக் கிழங்கு சாகுபடிக்கு 50 சத மானியம் அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு ரூ.27,500/-ம், தொழில்நுட்பப் பயிற்சியும் தோட்டக்கலைத் துறை மூலமாக வழங்கப்படுகிறது. கிழங்குகளை முதல் வருடத்தில் விதைத்துவிட்டால், 3 வருடம் வரை பயன் தரும். கிழங்குகள் ஜூலை-ஆகஸ்ட் மாதத்தில் துளிர்த்து, 6 மாதங்களில், அதாவது ஜனவரி-பிப்ரவரி மாதத்தில் அறுவடைக்கு வரும். ஆனால், கிழங்குகள் பூமிக்கு அடியில் அடுத்த பருவ காலமான ஜூலை-ஆகஸ்ட் மாதம் வரை ஓய்வுத்தன்மையில் இருக்கும்.

கண்வலிக் கிழங்கு சாகுபடிக்குத் தமிழகத்தில் உள்ள தட்பவெப்ப நிலை சாதகமாக உள்ளதால், அதிக அளவில் சாகுபடியாகிறது.

வருவாய்:

முதல் வருடத்தில் ஒரு ஏக்கரில் கிடைக்கும் வருமானமான ரூ.2.50 இலட்சம், சாகுபடிச் செலவுக்கு மட்டுமே ஈடுசெய்யப்படுகிறது. இரண்டாவது மற்றும் மூன்றாவது வருடங்களில், செலவு போக ஏக்கர் ஒன்றுக்கு ஆண்டுக்கு ரூ.1.50 இலட்சம் வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு ரூ.3.00 இலட்சம் நிகர இலாபம் கிடைக்கிறது.

கண்வலிக் கிழங்கின் பயன் மற்றும் ஏற்றுமதி:

கண்வலிக் கிழங்கு விதைகள் மற்றும் கிழங்குகள்மூலம் “கோல்ச்சிசின்” “கோல்சிகோசைடு” ஆகிய மருந்து மூலப்பொருட்கள் எடுக்கப்பட்டு, அவை மருத்துவத்தில், முகப்

பரு, தோல் நோய், குடல் புண், குடற்புழுக்கள், தொழுநோய், சுகப் பிரசவம் போன்ற நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. கண்வலிக் கிழங்கு விதைகள், இத்தாலி, பிரான்ஸ், ஹங்கேரி மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஆண்டுதோறும் சராசரியாக 700 மெட்ரிக் டன் அளவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதன் விதைகளை 3 முதல் 6 மாதங்களுக்கு சாதாரணக் கிடங்குகளிலும், ஒரு வருடம் வரை பாதுகாக்கப்பட்ட மற்றும் குளிரூட்டப்பட்ட அறைகளிலும் சேமிக்க இயலும்.

கண்வலிக் கிழங்கின் விற்பனை:

தற்பொழுது ஒரு கிலோ கண்வலிக் கிழங்கு விதை சராசரியாக 1,000/- ரூபாய்க்குக் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. கண்வலிக் கிழங்கு பொதுவாக முழு ஒப்பந்த சாகுபடி செய்யப்படாமல், அந்தந்தப் பருவத்திற்கு மட்டும் கொள்முதல் செய்யும் நிறுவனங்கள் முன் அறுவடை ஒப்பந்தத்தைச் செய்துகொள்கின்றன.

விவசாயிகள் கோரிக்கை—மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை

கண்வலிக் கிழங்கு விதைக் கொள்முதல் செய்யும் நிறுவனங்கள் சென்ற ஆண்டு கிலோவிற்கு ரூ.1,700/- விலையாகக் கொடுத்துவிட்டு, இந்த ஆண்டு ரூ.1,000/- கொடுப்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல எனவும், குறைந்தபட்சம் ஒரு கிலோவிற்கு ரூ.1,300/- வழங்க வேண்டுமென்ற விவசாயிகளின் கோரிக்கையின் அடிப்படையில், விவசாயிகளின் விளைபொருள்களுக்கு உரிய விலை கிடைக்க ஏதுவாக உற்பத்தியாளர், கொள்முதல் செய்பவர்கள் மற்றும் துறை அலுவலர்கள் பங்கு பெறும் கலந்தாய்வுக் கூட்டம், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 17-4-2010 மற்றும் 3-5-2010 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டு, அதில், இனிவரும் காலங்களில் 1 கிலோ கண்வலிக் கிழங்கு விதைக்கு ரூ.1,000/-க்கு மேல் விலை நிர்ணயம் செய்து வழங்குமாறு தனியார் நிறுவனங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

ஒப்பந்தப் பண்ணையம் (Contract Farming)

கண்வலிக் கிழங்கு விதைகளைக் கொள்முதல் செய்யும் தனியார் நிறுவனங்கள் மிகக் குறைந்த விலைக்கே வாங்குவதால், விவசாயிகளுக்கு எதிர்பார்க்கும் பலன் கிடைக்காமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனைத் தவிர்க்க, தனியார்

2010 மே 12] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

நிறுவனங்களுடன் ஒப்பந்தப் பண்ணையம் (Contract Farming) செய்துகொண்டு, கண்வலிக் கிழங்கு விதைக்கு நல்ல விலை கிடைத்திட வேளாண்மை விற்பனைத் துறைமூலம் நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யப்படும். செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள விலையினை விவசாயிகளுக்குத் தனியார் நிறுவனங்கள் கொடுக்கின்றனவா என்பதை வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை கண்காணிக்கவும் ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். கண்வலிக் கிழங்குச் செடிகளை திண்டுக்கல் மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் வேதாரண்யம், அரியலூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில், திருப்பூர் மாவட்டத்தில் மூலனூர், தாராபுரம், கரூர் மாவட்டத்தில் அரவக்குறிச்சி மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் விவசாயிகள் பயிர் செய்து வருகிறார்கள். இதை மத்திய அரசு மூலிகைத் தாவரமாக அறிவித்து, விவசாயம் செய்கின்ற விவசாயிகளுக்கு ஒரு எக்டேருக்கு ரூ.68,750 மானியமாகத் தருகிறார்கள். இந்த விதைகள் வெளிநாட்டிற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஹங்கேரி, பிரான்ஸ், இத்தாலி, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு மருந்துகளுக்காக இந்த விதைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்த விதைகளை ஐந்து நிறுவனங்கள்தான் இந்தியாவில் வாங்கிக் கொண்டிருக்கின்றன. Sanmar Speciality Chemicals, Chennai, Indena India Private Limited, Bangalore, Alkaloids Private Limited, Hyderabad, Alchem International Limited, New Delhi, Indian Glygoly Limited, Uttar Pradesh ஆகிய ஐந்து நிறுவனங்கள்தான் இந்த விதைகளைக் கொள்முதல் செய்து வருகிறார்கள். 2003 ஆம் ஆண்டு அவர்கள் கொள்முதல் செய்த விலை ஒரு கிலோவிற்கு ரூ.300/-, 2004-ல் ரூ.400/-, 2005-ல் ரூ.400/-, 2006-ல் ரூ.600/-, 2007-ல் ரூ.1,000/-, 2008-ல் ரூ.1,250/-, 2009-ல் ரூ.1,750/-க்கு வாங்கினார்கள். ஆனால், இந்த ஆண்டில் அந்த ஐந்து நிறுவனங்களும் கூட்டாகச் சேர்ந்துகொண்டு, அவர்களுக்குள் ஒரு Syndicate அமைத்துக்கொண்டு, இந்த ஆண்டு அந்த விதையை கிலோ

ரூ.1,000/-க்குத்தான் வாங்கியிருக்கிறார்கள். விவசாயிகளிடையே வாங்கிய சமயத்திலே, நாங்கள் ரூ.1,000/-க்கு வாங்குகிறோம், மற்ற நிறுவனங்கள் யாராவது கூடுதலாக விலை தந்தால், அதை நாங்கள் தரத் தயார் என்று சொல்லிவிட்டு வாங்கியிருக்கிறார்கள். ஆனால், திருப்பூர் மாவட்டத்தில், மூலனூரில் இதே விதையை இந்த ஐந்து நிறுவனங்கள் அல்லாமல் வேறொரு நிறுவனம் கிலோ ஒன்றுக்கு ரூ.1,300/-க்கு வாங்கியிருக்கிறார்கள். இதை அறிந்த விவசாயிகள் அந்த ஐந்து நிறுவனங்களிடமும் சென்று, ரூ.1,300/-க்கு வாங்கியிருக்கிறார்கள், அந்த விலையை எங்களுக்குத் தாங்கள் தர வேண்டுமெனக் கேட்டதற்கு, அதற்கு அந்த நிறுவனங்கள் விலையைத் தர மறுக்கிறார்கள். எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகள் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே, எங்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டுமென்று முறையிட்டதன்பேரில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கடந்த 17-4-2010 ஆம் நாளன்று அந்த 5 நிறுவனங்களினுடைய முகவர்கள், பாதிக்கப்பட்ட விவசாயிகளை அழைத்து கலந்தாய்வுக் கூட்டம் நடத்தி, விவசாயிகளுக்கு மூலனூரிலே என்ன விலை தந்தார்களோ, அதே விலையை நீங்களும் தர வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வலியுறுத்தியபோதிலும், இன்னும் அந்த நிறுவனங்கள் விலை கொடுப்பதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. இந்த ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்ன விலையை ஒத்துக்கொள்ளவில்லையென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த 5 நிறுவன உரிமையாளர்களையும் சென்னைக்கு வரவழைத்து, விவசாயப் பிரதிநிதிகளையும் வரவழைத்து, அரசுத் துறை அதிகாரிகளையும் வரவழைத்து ஒரு முத்தரப்புக் கூட்டம் கூட்டி, விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை கிடைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு கண்வலிக் கிழங்கு விதை கொள்முதல் செய்யும் இந்த 5 நிறுவனங்கள், சராசரியாக

2010 மே 12] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

ஒரு கிலோவிற்கு ரூ.1,700/- விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். ஆனால், இந்த ஆண்டு 1,000/- ரூபாய்தான் கொடுக்க முடியும் என்று அந்த விலைக்கு வாங்க முற்பட்டதனுடைய விளைவு, விவசாயிகள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டு, சென்ற ஆண்டு வாங்கிய விலையையே இந்த ஆண்டும் கொடுத்து, இந்த கண்வலிக் கிழங்கைக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். ஆனால், அவர்கள் அதற்கு ஒப்புக்கொள்ளாத காரணத்தால், மாவட்ட ஆட்சித் தலைவர் 17-4-2010 மற்றும் 3-5-2010 ஆகிய இரண்டு நாட்கள் விவசாயிகளையும், இந்தக் கிழங்கைக் கொள்முதல் செய்யக்கூடியவர்களையும் அழைத்துப் பேசி, குறைந்தபட்சம் 1,300/- ரூபாயாவது கொடுக்க வேண்டுமென்று அவர்களிடத்திலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவர்கள், நாங்கள் கலந்து பேசி பிறகு முடிவு சொல்கிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் விவசாயிகளுடைய கருத்தை அவர்கள் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்கெல்லாம் ஒரு நிரந்தரமான தீர்வைக் காண வேண்டுமென்றால், வரும் ஆண்டில் ஒப்பந்தப் பண்ணையம் (Contract Farming) முறையில் விவசாயிகள் கண்வலிக் கிழங்கு விதையை வாங்கக்கூடியவர்களிடத்திலே செய்துகொண்டால், ஒரு கிலோ இந்த விலைக்கு வாங்குகிறோம் என்று ஒப்பந்தம் செய்துகொள்வார்களானால், விலை குறைந்தாலும் அந்த விலையையே தர வேண்டும், விலை கூடினால் கூடுதலான விலையைத் தர வேண்டும். இதுதான் Contract Farming முறை என்பது. அந்த முறையையே பின்பற்ற வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே அரசின் சார்பில் ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர். சுருக்கமாக ஒரு கேள்வியைக் கேளுங்கள்.

திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏற்றுமதி செய்யப்படுகின்ற, அந்நியச் செலாவணியை ஈட்டுத் தருகின்ற பயிராக இருக்கின்ற காரணத்தால், இதை வேளாண்மை விற்பனைக் குழு மூலமாகக் கொள்முதல் செய்வதன்மூலம் தனியார் நிறுவனங்களும், இடைத்தரகர்களும் விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான விலை கிடைக்காமல் தடுப்பதைத் தடுப்பதற்கு அரசு

[திரு. எஸ்.எஸ். சிவசங்கர்] [2010 மே 12

முன் வரவேண்டும். அதுபோல, இந்தப் பயிரைப் பயிரிடுகின்ற அனைத்து விவசாயிகளுக்கும் மத்திய அரசு வழங்குகின்ற மானியத்தைப் பெற்றுத் தரவும் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கண்வலிக் கிழங்கைக் கொள்முதல் செய்து இத்தாலி, பிரான்ஸ், ஹங்கேரி மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அனுப்பி, அங்கிருந்துதான் அதை மருந்தாகத் தயாரித்து, பிறகு பல்வேறு நாடுகளுக்கு அனுப்புகின்றார்கள். மாநில அரசாங்கம் இதுபோன்ற கண்வலிக் கிழங்கு போன்றவற்றை இதுவரை கொள்முதல் செய்யவில்லை. இனியும் கொள்முதல் செய்யக்கூடிய அந்த வாய்ப்பு இல்லை. வேண்டுமானால், ஒரு சிறப்பு அம்சமாகக் கருதி, இதுபோன்ற வியாபாரிகள் Syndicate அமைத்துக்கொண்டு விலையைக் குறைத்து, வாங்க முற்படுகின்றபோது, மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலே கொண்டு வந்து அவற்றை வைத்து, மறைமுகமான ஏலத்தின்மூலம் விற்கின்ற அந்த ஏற்பாட்டைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது. அதற்கு விவசாயிகளும் ஒத்துக்கொள்ள வேண்டும். *(குறுக்கீடுகள்)*

முற்பகல் 11-45

7. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். இன்றைக்கு இவ்வளவுதான் முடியும். குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

***திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2010 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 202 முதல் 212 வரையிலான 11 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

TRUTH ALONE TRIUMPHS